# புதிய நிதியாண்டை புதியதிலிருந்து துவங்குவோம்!

**கோவை, பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம்** பெருமையுடன் வழங்கும்

# அடோபி இன்டிசைன் சிசி

## இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் (தமிழில்)

**மின்னூல் - மின்பதிப்பு உருவாக்கம் உட்பட...**

**Kovai, Balaji Institute of Computer Graphics** proudly presents

## Two days Training (in Tamil) on

# Adobe InDesign CC

**including e-Book & e-Pub creation...**

**நாள் / நேரம் :** **28,29-03-2020 சனி, ஞாயிறு** காலை 10 முதல் 5:00 மணி வரை

**நிகழிடம் :** **பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம்**
164, போலீஸ் கந்தசாமி வீதி, ஒலம்பஸ், இராமநாதபுரம், கோவை-45

| | | |
|---|---|---|
| **கட்டணம்*** : | நபர் ஒருவருக்கு | ரூ. 2800 மட்டும் |
| *இத்துடன் உள்ள இணைப்பைக் காண்க. | சங்க உறுப்பினர்களுக்கு | ரூ. 2500 மட்டும் |
| **07-03-2020க்குள் முன்பதிவு செய்பவர்களுக்கு** | | **ரூ. 1800 மட்டும்** |

இதில் பயிற்சிக் குறிப்பேடு, ரூ. 340 மதிப்புள்ள இன்டிசைன் சிஎஸ்4, இன்டிசைன் செயல்முறை பயிற்சிகள் ஆகிய 2 புத்தகங்கள், காலை மதியம் தேநீர், மதிய உணவு (அருகில் உள்ள உணவகம் சென்று அருந்திவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது), பயிற்சியில் கலந்து கொண்டமைக்கான சான்றிதழ்* ஆகியன உட்பட அடங்கும்.

**ஒரே நிறுவனத்திலிருந்து பயிற்சிக்குக் கூடுதலாகக் கலந்து கொள்ளும் ஒவ்வொரு நபருக்கும் கட்டணம் ரூ. 500 குறைவாகும். கூடுதல் நபர்களுக்கு புத்தகங்கள் மட்டும் வழங்கப்படமாட்டாது.**

**பதிவு செய்ய கடைசி தேதி : 21.03.2020, மாலை 5 மணி**

**எல்சிடி / டிவி உதவியுடன் பெரிய திரையில், இன்டிசைன் மென்பொருளின் அனைத்து கட்டளைகள், கருவிகள் பற்றிய விளக்கம் செயல்முறையாகக் காட்டப்படவுள்ளதுடன் இன்டிசைன் தொடர்பான அனைத்து வினாக்களுக்கும் செயல்முறையாக விரிவான விடையளிக்கப்படும். நிகழிடத்திற்கு அருகிலேயே தங்கும் வசதியும் உள்ளது.**

**கணினி வரைகலைப் பகுதியில் முன்னனுபவம் உள்ளவர்கள் / இல்லாதவர்கள் இந்தப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு இன்டிசைன் மென்பொருளை நேரடியாக பயன்படுத்தத் தொடங்கலாம்.**

## நிகழிடத்தில் பதிவு செய்தால் கட்டணம் - ரூ. 3500

நிகழிடத்தில் பதிவு செய்ய விரும்புபவர்கள் 27.03.2020 மாலைக்குள் 99444-13782 எண்ணில் உறுதி செய்துவிட்டு வரலாம்.


**பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம், கோயம்புத்தூர்**

veeranathan@yahoo.com, balajiicg@yahoo.com

**தொடர்பு கொள்ள வேண்டிய எண்கள் :** 98422-13782, 99444-13782, 0422-2323228


*நிபந்தனைகளுக்கு உட்பட்டு.

**www.veeranathan.com தளத்திலிருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பலாம்.**

**பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம்** பெருமையுடன் வழங்கும்

# இன்டிசைன் சிசி

## இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் (தமிழில்)

**28,29.03.2020 - 10 am to 5 pm**

**கோவையில் – கலந்து கொள்ளுவதற்கான விண்ணப்பம்**

கலந்து கொள்ளுபவரின் புகைப்படம் இங்கே ஒட்டவும். புகைப்படத்துடன் மட்டுமே சான்றிதழ் வழங்கப்படும்.

**நிறுவனத்தின் பெயர்** : ...............................................

**முகவரி** : ...............................................

...............................................

...............................................

**தொலைபேசி** : ...............................................

**செல்பேசி** : ...............................................

**மின்னஞ்சல் முகவரி (அவசியம் தருக)**: ...............................................

**வலைதள முகவரி** : ...............................................

**கலந்து கொள்பவர் பெயர்(கள்) மற்றும் செல்பேசி எண்(கள்)** :

1. ...............................................
2. ...............................................
3. ...............................................
4. ...............................................

**தங்கும் வசதி தேவையா?** : ☐ ஆம் ☐ இல்லை.
ஆம் என்றால் எத்தனை நபர்களுக்கு? எண்ணிக்கை......................

**தற்போது பயன்படுத்திக் கொண்டிருக்கும் மென்பொருட்கள் :**

☐ பேஜ்மேக்கர், ☐ கோரல்டிரா, ☐ போட்டோஷாப்
☐ இன்டிசைன், ☐ இல்லஸ்ட்ரேட்டர், ☐

---

பயிற்சி கட்டணம் ஒரு நபருக்கு ரூ. 2900* மட்டும். ரொக்கம் / காசோலை / வங்கி வரைவோலையாக இணைக்கலாம்.

**மொத்தம் செலுத்தும் தொகை விவரம் : ரூ.**
**இணைய வழி பணப்பரிமாற்றம் விவரம் :**

---

**தேதி :** **கையொப்பம் / அலுவலக முத்திரையுடன்**

**இன்டிசைன் தொடர்பான உங்களது கேள்விகளை இதன் பின்புறம் எழுதி அனுப்பலாம். நிகழ்ச்சியில் பதில் வழங்குகிறோம்.**

---

*07.03.2020ம் தேதிக்கு முன்பாக பதிவு செய்தால் கட்டணம் ரூ. 1800 மட்டுமே.

# ஏன் இன்டிசைன் ...?

கணனி வரைகலையில் அச்சுத்துறையின் அனைத்துவிதமான வடிவமைப்புகளுக்கும், புத்தக வேலைகளுக்கான பக்க வடிவமைப்பிற்காக பயன்பாட்டில் இருந்துவந்த, தற்போதும் பயன்படுத்திக் கொண்டுள்ள அடோபி நிறுவனத்தின் பேஜ்மேக்கர் மென்பொருளில், ஏராளமான குறைபாடுகள் உள்ளன. இவற்றையெல்லாம் களைந்து, இன்னும் அதிகமான வசதிகளுடன் உருவாகப்பட்டதே இந்த **இன்டிசைன்** மென்பொருளாகும்.

பக்க வடிவமைப்பு மட்டுமல்லாமல், வெக்டார் வகையிலான படங்களையும் உருவாக்கவும் இந்த இன்டிசைன் மென்பொருளில் பல வசதிகள் உள்ளன. அத்துடன் தலைப்பு எழுத்துக்களை அழகுபடுத்துவது, பின்புலனாக வண்ணங்களை நிறுத்துவது உள்ளிட்ட ஏராளமான, வரைகலை அம்சங்கள் இன்டிசைனிலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

**அச்சுத்துறைக்கென்றே, அச்சுத்துறைக்குத் தேவையான, அதில் பயன்படுத்தப்பட்டுவரும் பல்வேறு அம்சங்களை தன்னுள் கொண்டுள்ளதாகவும் இந்த மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது.**

தமிழக அச்சுத்துறையில் தற்போது புழக்கத்தில் உள்ள பாலிமாஸ்டர் வேலைகளிலிருந்து கம்ப்யூட்டர் டூ பிளேட் வகையான வேலைகள் அல்லாமல், நேரடியாக கம்ப்யூட்டர் டூ பிரிண்ட் தருகின்ற டிஜிட்டல் பிரிண்டிங் வரையிலான வேலைகளும் செய்யப்படுகின்றன. இவை அனைத் திற்கும் ஏற்ற பல செயல்பாடுகள் இன்டிசைனில் உள்ளன.

**அத்துடன் தற்போது பெரிய அளவில் பேசப்படுவதுடன், செயல்பாட்டிலும் கொண்டுவரப்பட்டுள்ள ஈ-பப்ளிகேஷன் எனப்படும் மின் பதிப்பு முறைக்குத் தேவையான மின்னூல்களை (ஈ-புக்ஸ்) உருவாக்குவதற்கு வேண்டிய பல்வேறு வசதிகள் இந்த இன்டிசைனில் கொடுக்கப்பட்டுள்ளன.**

இந்த மின்னூலுக்கு அடிப்படையான போர்டபிள் டாக்குமென்ட் ஃபார்மேட் எனப்படும் **பீடிஎஃப்** வகை கோப்புகளை உருவாக்குவது என்பது இன்டிசைனில் மிகவும் எளிமைபடுத்தப்பட்டுள்ளது. அதற்காக சிறப்புக் கட்டளைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆனந்தவிகடன் குழுமத்தின் அனைத்து இதழ்கள் மற்றும் குமுதம் உள்ளிட்ட பல்வேறு வார இதழ்களும், தினகரன், தினத்தந்தி உள்ளிட்ட நாளிதழ்களும் தற்போது இன்டிசைனை பயன்படுத்தியே தங்களது வடிவமைப்பை செய்து முடிக்கின்றனர்.** மேலும் சென்னையில் கணினி வரைகலை வடிவமைப்பாளர்களிடையே இந்த இன்டிசைன் பெரிய அளவில் புழக்கத்தில் உள்ளது.

2000ஆவது வருடத்தில் அறிமுகம் செய்யப்பட்ட இந்த இன்டிசைனின் 1வது பதிப்பைத் தொடர்ந்து இதன் 10ஆவது ஆண்டு நிறைவில், 12-04-2010 அன்று 7வது பதிப்பு சிஎஸ் 5 என்றும் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் தற்போது (மார்ச், 2019) 14வது பதிப்பு இன்டிசைன் சிசி என்ற பெயரில் பயன்பாட்டில் உள்ளது.

**அச்சுத்துறைக்கான பல்வேறு சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ள இந்த இன்டிசைன் மென்பொருளை முறையாக பயின்று பலனடைவதற்காகவே இந்தப் பயிற்சி வகுப்புகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.**

இந்தப் பயிற்சியின் முடிவில், தற்போது பயன்பாட்டில் உள்ள பேஜ்மேக்கர் மற்றும் கோரல்டிரா ஆகியவற்றை முற்றிலுமாக தவிர்த்து இன்டிசைனை மட்டும் பயன்படுத்த முடியும்.

## தற்போது பயன்பாட்டில் உள்ள மென்பொருளில் உள்ள குறைபாடுகள் :

- அதிக பக்கங்கள் உள்ள வேலையை சேவ் செய்து வைத்திருந்தால், மறுபடியும் துவக்கம்போது, தொல்லை தருகிறது.

- தானாக பக்க எண்கள் அமைப்பு கொடுப்பது கடினமானது.
- ஒரே வேலையில் வேறு வேறு தொடர்ச்சியான பக்க எண்கள் வரவழைப்பது இயலாது.
- ஒரு முறை நிறுத்திய படத்தை மாற்றுவதற்கு, அல்லது மாற்றங்கள் கொடுப்பதற்கு அதனை டெலிட் செய்துவிட்டு மீண்டும் இம்போர்ட் செய்தே நிறுத்த வேண்டும்.
- ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட படங்களை ஒரே பக்கத்தில் நிறுத்துவது முடியாது. ஒவ்வொன்றாகத் தான் கொண்டுவந்து நிறுத்த முடியும். அவற்றையும் இறுதியில் அளவில் சரி செய்ய வேண்டும்.
- நமது வேலையில் உள்ள தவறுகளை அறிய முடியாது.
- வேரியபிள் டேட்டா என்பது மிகவும் குறைவான அளவிலேயே செயல்படுகிறது. இதனால் அடையாள அட்டை போன்ற புகைப்படங்களை இணைக்கும் வேலைகளைச் செய்ய முடிவது இல்லை.
- திரையில் காட்டப்படும் வண்ணங்களும் அச்சில் கிடைக்கும் வண்ணமும் வேறுவேறாக உள்ளன.
- புத்தக வேலைகளில் பொருளடக்கம் (டேபிள் ஆஃப் கன்டென்ட்), தொழில்நுட்பச் சொல் உருவாக்கம் (இன்டெக்ஸ்) போன்றவை உருவாக்க மீண்டும் தட்டச்சு செய்ய வேண்டும்; அல்லது காப்பி – பேஸ்ட் செய்ய வேண்டும். நொடிகளில் உருவாக்க முடியாது.
- ஈ–புக் எனப்படும் மின்னூல் உருவாக்கத்திற்குத் தேவையான பல வசதிகள் கிடையாது. பீடிஎஃப்பாக மட்டும் மாற்ற முடியும். அனிமேஷன் வசதிகள் கொடுக்க முடியாது. ஃபிளிப்பிங் பேஜ் வசதியை பெற முடியாது.
- இணையப் பக்க வடிவமைப்பிற்காக செயல்படுவது சிரமம்.
- ஆட்டோபேக்கப் மற்றும் பேக்கப் நடக்கும்போது வேறு செயல்களைச் செய்ய முடியாது.
- பேக்கப் நடக்கும்போது மின்தடை ஏற்பட்டால் ஃபைலே கரெப்ட்டாகிவிடுவதும் உண்டு. அதாவது செய்து வைத்த வேலை முற்றிலுமாகக் கொட்டுப் போகிறது.
- இரவு வேலையை முடித்துவிட்டு மறுநாள் காலை ஃபைலைத் துவக்கினால் வெள்ளையாக ஒரு பக்கம் மட்டுமே காட்டப்படும் நிலை பல இடங்களில் ஏற்பட்டுள்ளது. ஆனால் ஃபைல் சைஸ் அதே அளவு உள்ளது.
- வேலை செய்து கொண்டிருக்கும்போது டெர்மினேட் ஆனால், அதுவரை செய்தவை டெலிட் ஆகிவிடுகின்றன.

**இதுபோன்ற தொல்லைகள் எதுவும் இன்டிசைனில் கிடையாது.**

**குறிப்பு : நாம் இன்டிசைனை சந்தைப்படுத்துவதற்காகவோ, விளம்பரப்படுத்துவதற்காகவோ அதற்குப் பரிந்து பேசவில்லை. சங்கமம் உட்பட எங்களது அனைத்துப் புத்தகங்கள் தயாரிப்பு மற்றும் பிற வடிவமைப்புகளை இன்டிசைனிலேயே தயாரிக்கின்றோம். எளிமையாகவும் முழுமை யாகவும் உள்ளது. யாமறிந்த மென்பொருட்களில் இன்டிசைனைப் போல எளியானதெங்கும் காணோம் என்பதாலும், யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற நோக்கத்தினாலும் இதனைக் கொடுக்கின்றோம்.**

**வடிவமைப்பாளர்கள் கிடைக்காத இந்த நாட்களில், உரிமையாளர்களே எளிதாக பழகிக் கொள்ளுவதற்கும் பயன்படுத்துவதற்கும் இதுவே மிகப் பொருத்தமான மென்பொருளாகும்.**

# இன்டிசைன் - இரண்டு நாட்கள் பயிற்சி வகுப்பு

பாலாஜி கணினி வரைகலைப் பயிலகம், கோயம்புத்தூர் மாதந்தோறும் தமிழக நகரங்களில் சிறப்புப் பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது. அதன்படி 2019–20ஆம் நிதியாண்டின் கடைசி நிகழ்வாக, 2020–21ஆம் நிதியாண்டிற்கான புதிய நிகழ்வாக எதிர்வரும் 28,29.03.2020 ஆகிய தேதிகளில், கோயம்புத்தூர் – 641045, இராமநாதபுரம், ஒலம்பஸ், 167, போலீஸ் கந்தசாமி வீதியில் உள்ள நமது பயிலகமான **பாலாஜி கணினி வரைகலைப் பயிலக**த்தில் **இன்டிசைன் சிசி** மென்பொருளுக்காக 2 நாட்கள் பயிற்சி வகுப்பினை நடத்தவுள்ளோம். **(2 days Training Calsses on InDesign CC)**

> **கவனிக்க :** இது ஒரு பயிற்சி வகுப்பு. அடிப்படை கணினி பயிற்சி உள்ளவர்கள், கணினி வரைகலையைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள், அடிப்படை கற்பனை வளம் மற்றும் ஓவியத் திறமை உள்ள எவரும் இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளலாம்.

இந்த நிகழ்வில் அச்சு, விளம்பரம், பதாகை மற்றும் புத்தகப் பதிப்பு ஆகிய துறைகளுக்குத் தேவையான தகவல்களுடன் இன்டிசைன் மென்பொருளின் கருவிகள், கட்டளைகள் அவற்றின் பயன்பாடு போன்றவை செயல்முறையாக, எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்கப்படும். மேலும் இன்டிசைன் தொடர்பான உங்களது பிற ஐயப்பாடுகளுக்கும் விடையளிக்கப்படும்.

இன்டிசைன் சிசி பதிப்பின் அடிப்படையில் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் குறிப்புகள் எடுக்க பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட குறிப்புப் புத்தகம் வழங்கப்படும். அதில் தரப்பட்டுள்ள இன்டிசைனின் கட்டளை பெட்டிகள், கருவிகள் போன்றவற்றின் அருகில் தேவையான குறிப்புகளை எழுதிக் கொள்வதால், உங்கள் இடத்தில் ஏற்படும் ஐயப்பாடுகளை உடனடியாக ஒப்புநோக்கி சரி செய்து கொள்ளலாம்.

நிகழ்ச்சியின் போது உங்களது மடிக்கணினி போன்றவற்றை பயன்படுத்த வசதி கிடையாது. எனவே அவற்றை கொண்டு வரவேண்டாம். நிகழ்ச்சிக்குப் பிறகு, 1 மாத காலம் வரையிலும் காலை 9 – 1, மதியம் 4 – 7 மணி வரையிலும் உங்களுக்கான ஐயப்பாடுகளுக்கு மின்னஞ்சல் வழியாகவும், திறன்பேசியின் டெலிகிராம் வழியாகவும் விரிவான விளக்கம் தரப்படும். முடிந்தால் தொலைபேசி வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பாக இதுபோன்ற நிகழ்ச்சிகளை நாங்கள் ஒருங்கிணைப்பதன் அடிப்படை நோக்கம், அறிந்ததைப் பகிர்ந்து கொள்வோம் என்பதற்காகவேயாகும். மேலும் ஆங்காங்கே உள்ள அச்சக நண்பர்கள், கணினி வரைகலைஞர்களுக்கு இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இதுபோன்ற நிகழ்வுகள் உதவுகின்றன.

வாய்ப்பு கிடைத்தால் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் இதுபோன்ற பயிற்சி வகுப்பைத் தொடர்ந்து நடத்த விரும்புகின்றோம்.

வாருங்கள் புதியன கற்போம்; மாற்றத்தை ஏற்போம்; புதிய மாற்றங்களை படைப்போம்.

# இன்டிசைன் - இரண்டு நாள் பயிற்சி வகுப்பு

இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புகிறவர்கள் தங்களது பெயர், ஊர் ஆகியவற்றை மட்டும் நமது செல்பேசி எண்ணுக்கு (99444-13782) குறுஞ்செய்தி (SMS) அல்லது டெலிகிராம் (Telegram Message) செய்தியாக 21.03.2020க்குள் அனுப்பி வைத்தால் போதும். தொகை ஏதும் தற்போது செலுத்த வேண்டாம். நிகழிடத்தில் ரூ. 2800 செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்தப் பதிவிற்கு வேறு சலுகை ஏதும் கிடையாது.

பயிற்சிக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்தித் தங்களது வருகையை உறுதிப்படுத்துவதன் மூலம் எங்களது செயல்பாடுகளுக்கு உற்சாகம் கொடுப்பவர்களை ஊக்கப்படுத்துவதற்கும் விரும்புகின்றோம். கீழே தரப்பட்டுள்ள நமது வங்கிக் கணக்கில் 07.03.2020ம் தேதிக்குள் செலுத்திப் பதிவு செய்பவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தில் ரூ. 1000 தள்ளுபடியும், ரூ. 500 மதிப்புள்ள, **100 Editable Vector Decorative Borders in CDR File - CD** ஒன்று முற்றிலும் விலையில்லாமல் (நிகழிடத்தில்) வழங்கப்படும்.

மேலும் 21.03.2020ம் தேதிக்குள் தங்களது வருகையை ரூ. 500 மட்டும் நமது வங்கிக் கணக்கில் செலுத்தி உறுதி செய்து கொள்ளுபவர்களுக்கும் மேலே சொன்ன ரூ. 1500 மதிப்புள்ள குறுவட்டு விலையில்லாமல் வழங்கப்படும். எந்தப் பதிவும் செய்யாமல் வந்து நிகழிடத்தில் ரூ. 3500 செலுத்துபவர்களுக்கு எந்தவிதச் சலுகையும் இல்லை.

நமது வங்கிக் கணக்கு விவரம் :

**Karur Vysya Bank (KVB) - SB A/c. 1620 1720 00000 205.**

**J. Veeranathan, Ramanathapuram, Coimbatore. IFSC - KVBL0001620**

**இந்த நிகழ்விற்கு அதிகபட்சமாக 10 நபர்களை மட்டுமே அனுமதிக்க முடிவு செய்துள்ளோம். இதுபற்றிய செய்தி, குறுஞ்செய்தி மூலம் பதிவு செய்துள்ளவர்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தப்படும். எனினும் குறுஞ்செய்தி மூலம் அதிகமான நபர்கள் முன்பதிவு செய்திருந்தாலும், தொகை செலுத்தியவர்கள், குறுஞ்செய்தி மூலம் பதிவு செய்தவர்களுள் முதல் 10நபர்களுக்கு மட்டுமே வாய்ப்பு தரப்படும். என்றாலும் பதிவு எண்ணிக்கை அதிகமானால் அனைவருக்கும் வாய்ப்பு கொடுப்பதற்காக, நிகழிடம் மாற்றப்படலாம்.**

ஒரு முறை செலுத்தப்பட்டக் கட்டணம் எந்தக் காரணத்தை முன்னிட்டும் மாற்றுவதற்கும், திருப்பிக் கொடுப்பதற்கும், ரத்து செய்வதற்கும் முடியாது. இந்த நிகழ்ச்சி தொடர்பாக இறுதி முடிவு நமது பயிலகத்திற்கு உட்பட்டதாகும். கோயம்புத்தூர் சட்ட எல்லைக்கு உட்பட்டது.